நியூ தியேட்டர்ஸ் லிமிடெட் (கல்கத்தா)

போஜராஜன்

(தமிழ் பேசும் படம்)

SOLE DISTRIBUTORS:

CALCUTTA FILM EXCHANGE, MADRAS.

போஜராஜன்

டைரக்ஷன்: பி. வி. ராவ்.

பாட்டு தயாரித்தவர்: மதுரை பாஸ்கரதாஸ்

ரிகார்டிங்: லோகன் போஸ்.

படம்பிடித்தவர்: பிமல்ராய் [தேவதாஸ் புகழ்பெற்றவர்]

மேற்பார்வை: ஜடின் மித்ரா.

நடிகர்கள்.

டி. எஸ். கிருஷ்ண அய்யங்கார்	—	போஜராஜன்
விசாலூர். சுப்ரமணிய அய்யர்	—	ஜெயபால்
நாட் அண்ணாஜி ராவ்	—	புத்திசாகர்
ஜி. பி. ராஜாயி	—	லீலாவதி
டி. விசாலாக்ஷி	—	விலாஸவதி
எஸ். வி. கல்யாணய்யர்	—	மூஞ்சா
ஜி. வைத்தியநாதன்	—	காளிதாஸ்

ஜாலி கிட்டு அய்யர், ரங்கபாஷ்யம் முதலியவர்கள்

தயாரித்தவர்: நியூ தியேட்டர்ஸ லிமிடெட், கல்கத்தா.

THE SEAL OF

PERFECT THE NEW THEATRES LIMITED * CALCUTTA * PICTURE.

போஜராஜன் (பாட்டுகள்)

இதில் 2, 6, 8, 9, 12, 16, 17, 18, 19, 23, 25, 28, 40, & 44 எண்ணுள்ள பாட்டுகளை நீக்கப்பட்டது.

போஜராஜன்.

கதை சுருக்கம்.

நம்முடைய கதை சரியான சந்தர்ப்பத்தில் ஆரம்பமாகிறது. அரசன் சிந்துலன் இறக்குந் தருணத்திலிருக்கிறான் தன் ஏகபுத்திரனாகிய போஜனைவிட்டுப் பிரியச் சிந்துலன் வருந்துகிறான் எனினும் அவன் விதியின் ஆக்கினைக்கு உட்பட வேண்டுமல்லவோ? அரசன், போஜனைத் தன் சகோதரன் முஞ்சனின் பொறுப்பில் விட்டு, இறந்துபோகிறான்.

நாட்கள் பல செல்லுகின்றன மந்திரி புத்திசாகரரின் ஆதரவில் இளவரசன் போஜன் இராஜரீகத்துக்கு வேண்டிய சகல கலைகளிலும் ப்யிற்சியடைகிறான். பொறாமை மிகுந்த முஞ்சன் தன் தமையனுக்கு அளித்த வாக்குறுதியை மறந்து போஜனை ஒழித்துவிட முயற்சிக்கிறான் ஆந்திரதேச அரசனோடு போர் செய்யுமாறு போஜனை அனுப்புகிறான். இதில் போஜனே வெற்றியடைகிறான. இதை அறிந்த குடிகள் போஜனை அரசனாகக் கொள்ள விரும்புகிறார்கள்,

முஞ்சன் குடிகளோடு சேர்ந்துகொண்டு போஜனைப்போற்றுவதைப்போல் தனது மருகியான விலாஸவதியை அவனுக்கு மணமும் செய்துவைக்கிறான். பின்னர் விலாஸவதியைக்கொண்டு போஜனுக்குத் தீங்கிழைக்க சூட்சி செய்கிறான். இதை அறிந்த புத்திசாகரன், விலாஸவதியிடம் செல்லாதிருக்குமாறு, போஜனுக்கு எச்சரிக்கை செய்கிறான்.

முஞ்சன் கொடுங்கோலின் கீழ் குடிகளுக்கு பாதுகாப்பில்லாதிருப்பதை போஜன் அறிகிறான், தலைநகரைப் பரிசோதிப்பதற்கும் தன் மனைவியைக் காண்பதற்கும் தன் ஆசிரியரான புத்திசாகரிடம் விடைபெற்று செல்கிறான். முஞ்சனால் தூண்டப்பட்ட விலாஸவதி, தன் கணவனுக்கு விஷங்கொடுக்க, ஏற்பாடு செய்கிறாள். போஜ்ன் விலாஸவதியிடம் வர, நிகழ விருந்ததை அறிந்து வெறுப்புற்று அவ்விடத்தைவிட்டுச் செல்கிறான், முஞ்சன் தன் சேனாதிபதியான வத்ஸராஜனை அழைத்து போஜனைக்கொல்ல ஆக்ஞாபிக்கிறான், கொலைகடக்குமுன் நண்பன் காளிதாஸன் அங்கு வந்து போஜனைக் கொலைசெய்யாம லிருக்குமாறு பெரிதும் வேண்டிக்கொள்கிறான். வத்ஸராஜன் மனம் இளகி, இளவரசனுக்கு எப்போதும் உதவிசெய்வதாக வாக்களித்து போலித் தலையொன்றோடு முஞ்சனிடம் செல்கிறான்,

மனந்தேறிடும் வகை தோணனே
மைந்தனும் சுகம்பெறக் காணனே. (தினந்)

எனதாருயிர்க் குயிரான தாயே
இரங்காததும் ஏனோ சொல் நீயே
தன தாகவே நம்பினேனின் சேயே
தர்ம தேவதையே தயவே செய்வாயே (தினந்)

போஜன்

3 ராகம்: கல்யாணி ஆதி தாளம்

ஆனந்த பூஜை செய்தேன்
அம்மணீ பர (மானந்)
திவ்ய அரவிந்தத் தாளிணையைச்
சிறமே லணிந்து தினம் (ஆனந்)

தானம் தவம்புரிந்து தனயனெனப் பயின்ற
தாயே என்முதற் தெய்வம்நீயே பக்தியாய் நின்று (ஆனந்)

மானு பரணஜெயம் மாருத வெற்றிபெற்றேன்
மாதாநின் திருவருள் ஆதார சக்தியுற்றேன்
தேனர் மொழியாம் வுபதேசக் கல்வியுங்கற்றேன்
தேவர் மூவரறியச்
சிந்துலனின்
மைந்தனுனைச்
சந்ததமும். (ஆனந்)

புத்திசாகரர்

4 ராகம்: நாகஸ்வராவளி ஆதி தாளம்

மகிமைகூறத் தரமா போஜன் (மகிமை)
அகில நாதனருளால் உமதுசுதன்
அளவிலாப் பெருமைபெற் றனனுலகில் (மகிமை)

பகைவரும் உண்மையாய்ச் சதாதுதி
பழகிடும் குண விசேஷ தீரன்
தகைமிகும் குடிகள்தம் மாவல்பெறத்
ததியில் மாமுடிபுனைந் தருள்புரியும் (மகிமை)

போஜன்

5 ராகம்: சிந்து பைரவி ஆதி தாளம்

இயற்கையின் அழகே இனி தாம் இன்பமே
ஈசன் முடியிலேறும் இளமதிப் பிம்பமே

செயற்கை யழகனைத்தும் ஜகத்தினிற் ஜம்பே
ஜீவரிதை யறிந்தால் ஊரும் துன்பமே. (இயற்கையின்)

மயற்கரு யிருளை வாரி யுண்டிடவே
மாலைச் சந்திரன் ஜோதிவடிவே வசந்த
மாலைச் சந்திரன் ஜோதிவடிவே
இல்லை முடிவே கல்விமான்கள் புகன்றிடவே.
(இயற்கையின்)

படிகம்போல் தெளிந்தபாயும் சிந்து நதியே
பதிந்த முத்துடன் நவநிதியே—நீரில்
பதிந்த முத்துடன் நவநிதியே
காணத் ததியே மகா பாக்யமிதே ததியே. (இயற்கையின்)

6 காளிதாஸன்

இந்த மன்மத வசந்தகாலம்—புது
மணைவியை மலரணையில் மருவிப்
புணைபவர்க் கனுகூலம் (மன்மத)

மென்மக ரந்தமுடன்—தென்றல்
வீசிட மனங் கூசிடும் சுக (மன்மத)

கன்மனத் தோருக்குங் காதலுண்டாக்கும்
கானக்குயில் கீதம் ஆனந்தம் தேக்கும்
புன்மனம் போன்ற இருட் துயர் நீக்கும்
பொன்மதிச் சீதமும் வெம்மையாய்த் தாக்கும்
புவிக்குள் பிறந்தபேர்—அனு
பவிக்கக் கடவுள் அளிக்கு மின்பமே. (மன்மத)

தர்க்கப் பாட்டு.

காளிதாஸன்

7 ராகம் : ப்யாக் ஆதிதாளம்

அருமைப் போஜா இதுவுமோர்
பூஜை தானிந்த வூரிலே—இதைப்
பேசினுல் ராஜ த்ரோகமாகும் நம் பேரிலே. (அருமை)

போஜன்.

நேசனே ஈதோர் பூசனை யென்றே
நேரினில் கூறுதல் பெரும் பாபம்
நேரிழையார் துயர் மீறியே சோர்வதைப்
பாரினிற் காணவும் பரி தாபம்

கெஞ்சி றக்கமற்ற வஞ்சகர் யாரென
அஞ்சிடாமற் கூறவேணும். (கேச)

காளிதாஸன்

கிஷ்டூரனு முந்தன் சிற்றப்பனுர் சொந்த
கீச ஏவல் செய் பைசாசப் பதராகும் பேரிலே (அருமை)

போஜன்

8 ராகம் : பியாகடை ரூபக தாளம்

ஏனிதுவறையில் என் சரித்திரத்னையே
உறைத்திட இசையா திருந்தர்யென்
கேசனே மகா ராஜனே (ஏனிது)

கானிது வறைதானே யுனேயே
கம்பி மோசம் போனே னடாடா
ஞானியாம் குருநாதன்—மறைத்த
ஞாயமே சேயனு மறிந்திடேன் (ஏனிது)

மதிமுக சிலை ரதிவிலாஸ வதிபாலிடம் புகவிடாமல்
பதியென யெனேக் கைப்பிடித்தப் பெண்
பாவைக் கொருபலன் கொடாமல்
சதியவள் மனம் போலிருந்திடத்
தரணீ தனிலுடன் படாமல்
விதிவச மிதுவோ தடுத்ததும்
வேகமாய்த் ததி ஏகுவேன் கெடாமல் (ஏனிது)

விலாஸவதி

9 ராகம் : சங்கராபரணம் ஆதி தாளம்

அம்மணீ பவானி சங்கரியே
அகிலாண்ட ஈச் வரியே (அம்மணீ)

சிம்மவாகன தேவி மனேகரி
சீருடன் அடியவர் கோறுங் குணகரி (அம்மணீ)

மங்களாகர மிகுந்த சேவடியை
மானில மீதினில் மதித் தேனே
மாதுமணம் பெறு காதலர் வாழ்கவும்
மாதா அருள்புரி துதித்தேனே
சங்கரா பரண சாம்பவி சுமதி
சகல கலாநிதி யாகிய ஸ்ரீமதி. (அம்மணீ)

போஜன்

10 ராகம் : விருத்தம் அடாணா

கனத்துடன் இதுகாள் மட்டும்
காத்த சத்குரு நாதேந்த்ரா
மனத்துடன் முஞ்சன் செய் துன்
மார்க்கத்தை மறைத்த தேனே
இனத்துடன் எனது தந்தை
இயம்பிய மொழியென் யாளித்
தினத்துடன் விடைபெற் றேகத்
திருவருள் புரிகு வீரே.

11 ராகம் : அடாணா ஆதி தாளம்

வால வயதுடைய சீல குணவதியை
ஞாலம் புகழ மண மாலைபுரிந்து மிது
காலம் வறையில் அனுகூல மிலாத ஜெக
ஜாலப் பெரும் பகைவன் போலயா னிருப்பது
காலமோ அறியேனே ஸ்வாமீ இதன்
காரணம் தெறியேனே.

ஆவிக் கினியதோர் சஞ்சீவி விலாஸவதி
தேவியிடமே சென்றே வருகின்றே னின்றே
பூவிந்தயை புரிய வேணுமிது ததியே
சேவித் திடுமினிய ஜீவதயா நிதியே
மேவித் தடைபுரியிலா வேனதோ கதியே
நாவிற் கருணைமொழி கூறுந்தவ பதியே (காலமோ)

புத்தி சாகரர்.

12 ராகம் : ரீதி கௌள ஆதி தாளம்.

என் சத்ய மொழியைத் தெரிவாய்
நீதிசார மரிந்த நீ தவரிடா தெனது (சத்ய மொழி)

நித்ய மதிக தீயபகையும் குரூரமும்
நீடிய முஞ்சன் நேரிலாக் கொடியன் (சத்ய மொழி)

மனைவியிடம் போக முயன்றனை ததியே
மகா குற்றமதிலாம் பெருஞ் சதியே
தினையின்பமும் நம்பாதே பெண் மதியே
தேவியைத் தொட வேண்டா மிளம் பதியே

வினையே தவிர்த் திடவே
மதியினால் மிகவே முயன் றிடுவாய்

தனையன் நின் துயரமே தீர்ந்திடவே
களி கூர்ந்திடவே மகாதேவன் அருள் புரிவார் (சத்யமொழி)

விலாஸவதி.

13 பார்ஸி வர்ண மெட்டு

வருவாரோ மன்னன் அறியேன்
மணவாளன் எண்ணம் தெரியேன். (வருவாரோ)

ஒரு போதும் காதல் துறவேன்
உயர் பாதசேவை மறவேன். (வருவாரோ)

சிலைமாரன் ஏவுங் கணையே
கலைசோர் வாட்டு தெனையே. (வருவாரோ)

கனிபாலும் அமுதும் பகைத்தேன்
தனியாக நாளும் திகைத்தேன். (வருவாரோ)

தர்க்கப் பாட்டு.

14 மதன மாலினி

அன்னமே தேனே விலாஸ வதியே ஒரு
அந்தரங்கம் சொல்வேனிது ததியே நின்
மன்னவனுந் தாசியிடம் கதியே என
மயங்கிக் கெடவும் தலை விதியே. (அன்)

விலாஸவதி

வீண் பழியுறைதனை விடுவாய் அடி
பாங்கியே நீ கெடுவாய், சீச்சீ (பழியுறை)

இழிகுணத் தொழிலதை யுடையவள் நீயே
எனதுயிர்க் கணவரின் மனதறியாயே. (பழியுறை)

அரண்மனைத் தோழியென வுனைப்பொருத்தேன்
ஆகையால் ஜாக்ரதை யரிவையே வெறுத்தேன்
தரமறி யாதவளே அருவறுத்தேன்
தகுந்தயென் சுகந்தனை இகழ்ந்திடும். (பழியுறை)

மதன மாலினி

தன் னிகரில்லாதக் குணத்தாயே என்
தப்பித மிதனை மன்னிப்பாயே இளங்
கன்னியுன் காதலுடன் நீயே—இனிக்
கலந்து சுகித்து மகிழ்வாயே. (தன்னிகரில்லாத)

விலாஸவதி

15 ராகம் : சிந்து பைரவி ஆதி தாளம்.

சுபதினமீதே துதி கூறினேன்
துதி கூறினேன் கதி கோறினேன். (சுப தின)
ஜப தபயோக சித்தியுந் தானே
சேயிழையான் மிகவே யடைந்தேனே. (சுப தின)
போஜ குமாரரை உபசரித்திடவே
பூரிக்குதே மனம் போற்றிக் கும்பிடவே (சுப தின)

தர்க்கப் பாட்டு

16 முஞ்சன்

மாசிலாத நேசியே நின் கணவனும்
தாசி மையலால் மதியிழந்தனன்
காசினியோர் வசை பேசுகிறார் மிகக்
கவலை கொண்டேனிது அவல மென்றறிய. (மாசிலாத)

விலாஸவதி

மாமா தாமுறைப்பதும் உண்மை தானோ
மானு பாரணப்ரபுடகரைப் பழிப்பதேனோ
வஞ்சகப் பகைவர் கட்டிவிட்ட தொரு
வார்த்தையை நம்பிப் பேசாதீர்
மனதார நேரில் பார்த்தவர் யார்
மாதெனை வீணாய் வருத்தாதீர். (மாமா)

முஞ்சன்.

ஆசையாலே மோசம் போகிறாய் சதி
அறிவில்ல மிகச் சிறு குழந்தை நீ
வேசை யிடந்தனை விரும்பிய காமுகன்
வீடு நாடு மனைவியேதுங் கருதிடான். (ஆசை)

விலாஸவதி.

ஆஹா : பாவி என் தலை விதியே
ஆதாரம் யாருமில்லை ஈதோ என் கதியே.
அன்புகொண்டு மணம் செய்த காதலரை
அடையு மார்க்கமதை யறியேனே
அடியாளைக் காப்பதும் பாரம்
அருளேபுரி வீரிது நேரம் (மாமா)

17 பைரவி விலாஸவதி ஆதிதாளம்.

மார சிங்காரன வரவில்லையே (சுகு)
மகா துயராகினேன் மகிமை சேரும் பூஜித (மகா)
திரவுதாரனைத் தேடுகின்றேன்
திகழும் வதனகுண ஜீவ தயாபரன்
புகழும்படி பணிகள் புரியக் கருதினனே. (மார)

கண்ணார ஒருதரங் காணுவேனோ என்
கையாற்றழுவி இன்பம் பூணுவேனோ
புண்ணாக நெஞ்சம் புலம்புதையோ.
பூவிலினிய ஸஞ்சீவியென—என
தாவி துணைவாடி மேவிச்சுகமுறவே (மார)

18 தேவகாந்தாரி போஜன் ஆதிதாளம்.

மனைவியே கணவனென்னைக் கொல்லவும்
மனந்துணிந்தனளே மறலியென (மனைவியே)
துணைவி யென்று நம்பி மோசம்போனனே
துரோகமீது போதும் போதும் புவியினில் (மனைவியே)
இணையிலா தகுருவாக்கியம்—தனை
ஏற்றுவதே பெரும்பாக்யம்
பிணையிலாக் கொடிய பேதை அயோக்யப்
—பெண்டெனவே— இன்று தினம்—
—கண்டனனென (மனைவியே)

19 போஜன்

பெண்களின் சாகஸ மோசமிதே
பித்தர்கள் நம்பிடில் நாசமதே.

கண்களும் வார்த்தையும் வேறுடன் நஞ்சென
கண்டு கொண்டேன் ததியே—கெட்டப்
பெண்டு கொண்டேன் விதியே. குரு
தொண்டு கொண்டேன் மதியே.

கருதியேதனது மருகியோடுறவு
புரிவதென்ன நீதி—நான்
பெரிய தீய விரோதி.

கண்டகரை இப்பொழுதே
துண்டுபடக் கொல்லுகிறேன். (பெண்களின்)

20 விலாஸவதி

மோசம் போனேனே—மதி—(மோசம்)
முனமே அறியாமலே மதி, (மோ)

ஆசைகூறி மூடுமந்தரம்.
அதர்ம மாமன் செய்த தந்தரம்.
தோஷியாகினேன் நிரந்த்ரம்.
துரோகமிதே—யாகும் சூதே (மோசம்)

பாசபந்தமே குலைந்தேன்.
பாலிலே விஷம் கலந்தேன்.
நாசகாலியா யலைந்தேன்.
நானே பாவி—தானே பூவில் (மோசம்)

முஞ்சன்.

21 நாட்டை ஆதி தாளம்.

அந்தச் சிறுபயல். செயலறிவாய்
கொலை புரிபவனெனத் தெரிவாய்
போஜனும்— (சிறுபயல்)

வெருவியப்பா தகத்தொழில் பலதானே
வெட்க மற்றெதிர் நடந்தலுற்றதொரு (சிறுபயல்)

மகா நீதிமான் போலவன்றனையே
மடமதியால் மிகப்புகழ்கின்றனையே
சகாயமுடனே துணை நின்றனையே
சதிகாரன்—பழிகாரன்—சோரன் (சிறுபயல்)

22 வத்ஸலராஜன்.

சுகபாக்யவதி யெனும் மெட்டு.

மகா—ராஜரே கோபம் ஏனோ
நடுக்க மடைந்தேனே. நன்றிதோ. (மகா ராஜரே)

போஜ குமாரன் செய்த
பொல்லாத குற்றமென்ன
நேசமாயே மை யென்பால்
நிகழ்த்துவீர் மன்னர் மன்ன
யோஜனை செய்து கூறுவீர் தேறுவீர் (மகாராஜரே)

தேசமெல்லாங் கொண்டாடும்
தீரநி தானியன்றோ
சிறந்த மனுநீதியை
அறிந்த மெஞ்ஞானியன்றோ
நாசகார்யம் நான் செய்வேனோ உய்வேனோ (மகா)

23 போஜன்

தோடி ஆதி தாளம்.

நம்பினேன் மகா தேவனே
தும்பிமாமுகனே துணை (நம்பி)

வெம்பினேனே தெய்வமே இப்பாவி
வேதமூர்த்தியே மெய்யாகப் பூவில் (நம்பி)

தினந்தோறும் திவ்ய பாதந்தேடினேன்
சிவ பூசனை புரிந்து பாடினேன்
மனந்தேறிடும் வகை காணவே கூடினேன்
மதியணிந்த பெம்மான் சுதா வாடினேன் (நம்பி)

24 வத்ஸலராஜன்

ஐயோ—இது விதியோ ஆண்டவா
நான் ஏது செய்வேன் (ஐயோ

பொய்யே நிறைந்த பாழும்
பூவியில் எவ்விதமுய்வேன் (ஐயோ)

தொஹைறா.

அநியாய க்காரனிடும் அன்னம் புசித்ததால்
அடைந்த பலன் போதும் போதும்
ஆறுமோ என்மனம் தேறுமோ
கொடுங்கோன்மைக் கடிமையுறும்
சூதும் வாதும்.

மெய்யே இல்லாத மகா வீணரோடு வாழுவேனோ
மீளாத்துய ரடைந்து பாழ்நரகில் வீழுவேனோ
(ஐயோ இது விதியோ)

25 போஜன்

நீதியில்லாச் சேதியிதே
நேரிலறிந்தேன் மகா சதி
நினைந்தனன் மனத்தினில் (நீதி)

கோதுடையோன் செய்யுங்
கொடுமையைச் சகித்திடக்
கூடுமோ கேடுதான் நாடறிய (நீதி)

ஏதினிமேல் பயந்தால் பெருந்தீது
இனத்துரோகி யாலேற்படுஞ் சூது
வாதினிமேல் பகை மீறவிடாது
வஞ்சகமுஞ்சனவன் சிறங்கொய்கிறேன் (நீதி)

26 விருத்தம்

கேதார கௌள.

ஆதிசிவன் அருளுமில்லை.
பொருளுமில்லை அன்புடைய
தந்தை வைத்த அரசுமில்லை
வாதியெனப் பத்தினியும் த்ரோகியானுள்
வஞ்சகனும் சிறிய பிதா வாஞ்சையில்லை
ஜாதியில்லை. ஜன்முமில்லை. அனுதையானும்
தாரணிமேல்
வாழ்வதற் சுகமே இல்லை.
நீதியில்லை. யெனக்காகப் பிறந்தான்
சாக நிச்சயம் நானிறந்து புகழ் நீடுவேனே.

27 முஞ்சன்

இள மாதரசேவுன்—தாசையினுலே
மன மிகவுருகினேன். புவிமேலே (இளமாதர)
நீன்—காதல் பெறவே நினைந்தேனே.
எனைக்—காத்திடுவாய் மடமானே.
அருங்—கருணையை அனுதினம் மறவேனே (இள)

முஞ்சன்

அந்தப் போஜனை இனி நினையாதே.
அவன் போயொழிந்தானடிகோதே.
முடி—புனை குவாயரசியாயிதுபோதே (இளமாதர)

28 விலாஸவதி.

வஞ்சகா நின் நெஞ்சமீதோ
முஞ்சனே என்னை மதித்திடேன்
என்னை தொடாதடா (வஞ்சகா)
மான மழுந்திடுவாய் அவ
மான மடைந்திடுவாய் சீ. சீ. (வஞ்சகா)

29 திருடர்கள்

உச்சினி மகாளித்தாயே
உண்மையுடன் நீயே
ஒரு குறை யில்லாதபடி
உதவி செய்குவாயே.
கச்சைக் கட்டிக் குதிரை ஏறிக்
காட்டில் திரியும் கருப்பா
களவு செய்ய எங்களுக்கே
உளவு கூறும் பொருப்பா.
காவி துணியுடுத்தும் கங்காள யீஸ்பரனே
கனகமயிலில் வரும் கணபதி ஸோதரனே
கற்பூரம் தேங்காய்ப் பழம் அவல்பொறி
கடலை படைத்தோமைய்யா.

வேறு

தேவாதி தேவர்களே வாருங்களேன் ஆமா ஆமாம்
ஜயபாலர் வாழ வரங் கூறுங்களேன் ஆமா ஆமாம்
நாவாரக் காலமெல்லாம் பாடுகிறோம் ஆமா ஆமாம்
நாளிதுவே மேலும் பூஜை போடுகிறோம் ஆமா ஆமாம்.

30 ஆபேரி (ஆதி)

சிவமே என் விதி யீதோ
சேயேனுந் தெரியேனே
ஜனகாதி தேவர் பூஜிதபரனே (சிவமே)
தவமே செய் துணைகாணத்
தனையேனும் வந்தேன்
பவமேயறவே நீயே வரமீவாய்
படர்பக் தபாவிநான். (சிவமே)

மகராஜர் தானுகிலும் மடிவாருெருரு தினந்தானே
மனைவாதர் சுகமே மிக மாயம் தெரிந்தேனே
பகவானின் அருட்போத பதமே தந்திடவருவாய்
பரிபூரணனே திருமூர்த்தியே மூவா பாதுகாமகேச்வர
(சிவமே)

திருடன்

இளங் கள்ளுண்டு குடிச்சுக்கோ
கருவாட்டெக் கடிச்சுக்கோ
கவ்விவவ்வாப் பேலப் புடிச்சுக்கோ (இளங் கள்)
நல்ல. கணக்தான். குணுக்தான்.
பணுக்தான். மிணுக்தான்.
கஞ்சா அபீன் ஒருதம் அடிச்சிக்கோ (இளங்கள்)
அடிதோம் தருணாகத் துலே குயிலுத்தான்
ரெக்கெயெத் தூக்கி விரிச்சு ஆடுவதுலே மயிலுதான்
ஒரு ஜோக்கு நடையெப் பாக்க பாக்க ஓயிலுதான் (இளங்)

32 திருடி

மாமா மச்சான் உங்கள்
மனம்போல நானும் வந்தேன் (மா)
ஏமாத்திடாமெக்கள்ளு
எனக்கு தரவேணுமையே
என்னைவிடப் பேரளகி
எவளுமுண்டோ சொல்லுமையே (மாமா)
ஊருவசிந ரம்பயேவிட
ஓசத்தியாக ஆடுவேனே
ஓயாமெக் காதெக் கொடைய
உருகி உருகிப் பாடுவேனே (மாமா)

32 சண்டி (அடபயலே)

மணங்கமழும் குணத்திகழும்
மதுவருந்தித் தான் மகிழ்வீர்
மாறுத வெற்றிபெறும்
மன்னவரே இன்புறுவீர்
மனமார நான் தருவேன்
வாஞ்சையுடன் நேர்பெறுவீர் (மணங்)
சூராதி சூரர்கட்க்கே
சொந்தமிகும் பானமிதே
சுவாமிகளும் இதையருந்திச்
சுகமருளும் தியானமதே (மணங்)

ஜெயபாலன்

தேவதிருப்பாற் கடலமுதெனத்தகும்
திவ்ய பானமே அனு
தினமிதையன்பாய் பருகிடில் பெருகிடும் (தேவ)
தெய்வஞானமே உயர்

ஜீவதிடந்தனை யளிக்கும்—மது
திதிப்புடனே சிறிதுபுளிக்கும் புது
வாழ்வுநிறைந்து மனங்களிக்கும்
மாறுதவீரதீரங் கொடுத்திடும்
மகிமைப்பானமே உயர் (தேவ)

தோஹைறு.

மணங்கமழ்ந்து குணம் அமைந்த மருந்து இதுதானே
மகிழ்ந்தபோரில் பயந்திடாத ஜயம்தரும் சொன்னேன்.

பாட்டு.

ஜாதிமதபேதந்தனை யகற்றும் தவ
பதபோதந்தனைப் புகட்டும்—நமக்
கிதசோதரத்வம் பயிற்றும்—ஏகாந்த
மாய் ப்ரும்மானந்தம் தரும் இனியபானமே
ஜேயபாலன் உயர் (தேவ)

35 இராகமாலிகை

சீராகப் போராடியவீரா—அதி
தீரவுதாரனே (சீராக)
நேராகப் பாரினிலே வுனை
நித்தியமன்பு பதித்து மதித்தனே (சீராக)
கொடுங் கானடா வில்வந்த
குமர சாதுவே மனம்
நடுங்காமல் வெற்றிபெற்றாய்
ராஜகேஸரிபோல (சீராக)
எந்தன் மனமோகன
இன்பமுற்றிதிங்கனம்
உந்தன்குணமே தினம்
உலகம் கொண்டாடும் சாசனம் (சீராக)
யுத்தத்திற்கே பயந்தோடி
யொளிக்காத ஸிம்மம் நீயே
இத்ததிசேனபதியாய் இருந்துதவி
செய்வாயே— (சீராக)

36 லீலாவதி த்ருபத்

ஹா என் ஹம்ஸ தங்கா
அனுதையிடமிரங்காய் (ஹா)
அம்பிலே நீ யோடிடாதே (ஹா)

ஆதாரமாக யானுனைநம்பி
ஆசித்தேன் சதா
ஆவலாகத் தூதுபோவாய் (ஹா)

37 சசிப்ரபை. நீலாம்புரி ஆதி

தெய்வமே ஏது செய்வேன்
சிறையிலெவ்வித முய்வேன்
ஐயோ என் காலமீதோ அறியேனே
வையகம் போற்றுகின்ற
மன்னன் மனைவி யென்னை
மாபாவி முஞ்சன் செய்தான் வகை மோசம்
தையல் விலாஸவதி
தருணியின் காலகதி
தன்னை நினைக்தே ததி தவித்தேனே.

38 லீலாவதி.

தாமரை நீர் போலவே தத்தளிக்கிறேனின்றே
எனைத் தழுவுமோக மதனனோடு குலவு
தலென்றே (தா)

காமக்கனல் மீறியதால்
கங்கையிதில் மூழ்கவந்தேன் என்
கண்ணிறைந்த கணவரைக்
காணமலே நொந்தேன் அந்தோ (தா)

தொஹைரா,

சுவாமியின் எண்ணமேதோ
தருணியான் அறிகிலேனே
தனித்தொரு வார்த்தை பேசும்
சமயமும் தெரிகிலேனே

பாட்டு.

பூமிபுகழ் வீரதீர புனிதரோடு சேர்வதென்றோ
புண்ணியம் செய்யாத பாவி
எண்ணுதல் நன்றோ அந்தோ (தா)

தர்க்கப் பாட்டு.

39 போஜன்.

வசந்தகாலமிது மானே கண்பாராய்
மாமலர்ச் சோலையிதில் மகிழுவோம் வாராய் (வசந்த)

லீலாவதி.

கசந்த யிம்மொழியதைக்
காதினிற் கேளேன்
காமுகர் வலையிற்பட்டாலுயிர் மீளேன்
காளையரே இது வேளை மனந்தாளேன்
கபடச் செயலை நம்பி அபலையும் வீழேன்

போஜன்.

கருதியே தினமுங் காதல் கொண்டேனே
கடவுளறிய நேரிலுறுதி விண்டேனே (வசந்த)

தர்க்கப் பாட்டு.

40 போஜன், லீலாவதி,

தெய்வீகக் காதல் மணஞ் சூடுவோம்
மக தேவனருள் மேவத்துதி பாடுவோம் (தெய்வீக)

தேனும் பாலுங் கனிபோலுமே யுலகில் (தெய்வீக)
திருவருள் பெருகிட இருவருமருவிட (தெய்வீக)
மெய்யான பேரின்பமே விளைந்த மோகபிம்பமே
பொய்யானதே துன்பமே
புனிதப்படுமொரு
கணிதத் தினமிது
மனிதப் பிறவியில்
இனிதுற்றிடவரும் (தெய்வீக)

41 சண்டி.

என்ன கார்யமீது—இந்த
இடத்திற்கே பெருந்தீது—வரும்
மன்னவா என் மீது—நீர்
வருத்தமே கொள்ளாது—சொல்லும்
வார்த்தை தள்ளாது நல்ல
மனத்துடன் ததி—முடித்திடும்படி
உறைத்தேனிப்போது
சின்னப்பயலை இன்றே—அதி
சீக்கிறத்தினில் சென்றே—ததி
நன்னயமுடன் கொன்றே—வரில்
நமக்கு விளையும் நன்றே—இது
ஞாயந்தானென்றே—ஒப்பி
நடந்திடாவிடில்—மடந்தையானும்
உடந்தையும் அன்றே (என்ன)

ஜெயபாலன்.

42 மனவ்யாள என்னும் மெட்டு.

கடுங்கோபமேன் கண்ணே பெண்ணே
கல்வி மானவனைக் கொல்வதாலே பாபம் (கடுங்)
கொடுங்கோன்மதி கொண்டதேனடி
குமரன் மகா சமரன் தானடி (கடுங்)
தர்மமல்ல யீது—தையல்நாயகி
தனயன்போலவே—யாகுந் தாயகி
மர்மமாகுமோ—மதிமாமுகி
மனமே இரங்கி யருள்வாய் ரஞ்சகி (கடுங்)

43 ஸாவேரி லீலாவதி. ஆதி.

காதல் மனோகரனும் ஆதரவாகத்
தந்த கைக்கணையாழியைக் கண்டேன்
ஆனந்தங் கொண்டேன் (காதல்)

பூதலம் போற்றுகின்ற போஜருமாரரென்ற
புதுமை யறியாமலே மதிமோசம் போனேனின்றே
(காதல்)

ஏழைக் கைக்கெட்டியும்—வாய்க்
கெட்டாமற் போனதையோ
இலவு காத்தக் கிளிபோல்
என் கதையானதையோ
கோழையான் தெய்வதுதி
கூறியதெல்லாம் பொய்யோ
குவலயமீதிலெந்தன்
கவலை தீர்வதும் மெய்யோ (காதல்)

44 ஜயபாலன் விருத்தம்.

தடங்கொண்ட கானகத்திலுனை
யெடுத்துப் பகலிறவாய்த் தளரா அன்பின்
இடங்கொண்ட என்னகத்தில்
வளர்த்ததையும் மறந்து எனக்கெதிரியாக
த்திடங்கொண்ட காரியமே செயத்
துணிந்தாய் நன்றிகெட்ட சிறிய பெண்ணே
விடங்கொண்ட பாம்பினுக்கும் பால்வார்த்து
வளர்த்ததைப்போல் விடிந்ததின்றே.

45 குறவன்.

வெள்ளைக் குதுரே ஏறிநா
வேட்டையாடப் போறேனடி
நா—போறேனடி நா—போறேனடி
கள்ளுக்கடைச் சாமிகளைக்
கண்டு பேசிவாறே னடி
நா—வாறேனடி நா—வாறேனடி

45 a வாங்கமச்சா வாங்கா—

46 குறத்தி.

பொல்லாத குடிகாரனே—எம்
புருசனாக வாச்சானய்யோ
இல்லாத பொய்யெச் சொல்லி
எளக்கரமா ஏச்சானய்யோ
பொறுத்துப் பொறுத்து
வெறுத்துப் போச்சுது
அறுத்துக் கொள்ளவே
கருத்துமாச்சுது (பொல்லாத)

47 குறத்தி.

நீ யொரு மணிசந்தானு
நீட்டிப் பேசாதே போதும் நிறுத்திக்கோ (நீ)

ஒன் காயத்தெ இந்த ஊரில்
உள்ள நாட்டாமெ யிடங்கூறி
அவர் வாயினுலே காறித்
துப்ப வைக்கிறேன் சீ கேப்பு மாறி (மனுசங்)

வசனப் பாட்டு.

ஊள்ளு கொறெயெத் தள்ளிக்கிட்டு நீ
பல்லெக் கடிக்கரதும் எங்
காசெல்லாங் கரியாக்கி ஓளறிக்
கதெப் படிக்கரதும்
நல்லாருக்குது வேடிக்கே நீ
நடந்து கொள்ளுர வாடிக்கே
அப்பா! நாத்தம்பொறுக்க முடியல்லே
ஊஹூம் (நீயொரு)

48 குறவன்.

தொப்பு தொப்புனு போட்டடிக்கவும்
துணிச்சலென்னடி ஓனக்கு
எவன் செல்லிக்கொடுத்த பெனக்கு
நீயா சோறுபோட்றே எனக்கு
சும்மா தொணதொணத்தே திட்டித்திமிரி
பிடிபபதிக்கில்லே கணக்கு

49 குறத்தி. (வசனப்பாட்டு.)

கோளிக்குஞ்சு திருடிக்கிட்டு நீ
திரிஞ்சது தெரியாதா—ஒங்க
கும்பு குடும்பம் தெருத் தெருவாக
அலேஞ்சதும் தெரியாதா.

மானங்கெட்ட குடியனோட
வாளவே முடியாது—இந்த
வம்பென்னத்துக்கு வளக்கென்னத்துக்கு
போராட்டம் விடியாது
நீ ஓம்மன சுப்படியே நடந்துக்கோ
நானும் எம்மனசுப்படியெ இருந்துக்கிறேன்
இனிமே எங்கிட்ட வராதே.

50 குறவன்.

கோவத்தே நீகொஞ்சம் பொறுத்துக்கோ
ஒன்னெக்கும்பிட்றேண்டிகண்ணெத் தொடச்சிக்கோ
காளெக்—குடிக்கல்லேடி
சண்டெப்—பிடிக்கல்லேடி
நம்ம கொலேசாமி சத்தியம்
பலசாதி நானில்லே. (கோவத்)

போஜன்

51 ராகம்: தன்யாசி ஆதிதாளம்

கணவன்சொல் கேட்கவேணுமே
கதிசேரக் காதலுடன் (கண)

மணவாளனிடம்சீறி எதிர்பேசுவதுபாபம்
குணமே இல்லாதப் பெருங்கோபம்
கொடியபகையே முடிவினில் (கண)

பதிபக்தி யுள்ளவள்—இப்
பாரில் எல்லாம் வல்லவள்
பரமன் மாலயன் தேவர்
பதங்காணவும் நல்லவள்
விதியாம் மறணந்தன்னே
விளேயாட்டாக வெல்லுவவள்
நிதியாம் கற்பின் தன்மையை நீயே
அறிகுவை குறவனிதையே (கண)

52 குறத்தி

குறம் கூறல்.

கைலேமலே குறத்திநானே—ரேகை சோதிடம்
கைதேர்ந்த திறத்திதானே
கணிதக்குறி சொல்லுவேனே
பிணிகளெல்லாம் வெல்லுவேனே
கருகியே. உருகுவோர். அருகிலே. வருகவே
கடவுளறிய நடைபெறுவதை
திடமுடனுரைத் திடவேதெரியும். (கைலேமலே)

நரசிங்கவேடன் தங்கச்சியென்றால்
நானிலமெங்கும் அறியும் இந்தத்
துரைசிங்கவேடன் பொஞ்சாதியென்றால்
தொட்டில் குழந்தையும் புரியும்
கேள்விபட்டுப் பட்டெனக் கேட்பாய்
பதில் புட்டுபுட்டுநான் வைப்பேன்

நாடிழந்து நகரிழந்து
நல்லசுகந் தானிழந்து
காடுமலை தனிலலைந்து
கதறுகிறு யென்மகனே.
உன்னைக் கெடுக்க நினைத்தவனும்
கேடடைந்து செத்திடுவான்
கடிகவரும் பாம்புமுந்தன்
கால்பணிந்து ஓடிவிடும்
அடுத்தவூரு மன்னவனும்
ஆதரிப்பான் அஞ்சாதே
எடுத்தகுறி தப்பாது
எப்பொழுதும் சத்தியமே.

புத்திசாகரர்

53 ராகம் : சுருட்டி ஆதிதாளம்

நம்பினபேர்க்குச் செய்வதே உபகாரம்
மகாராஜ போஜனுக்கு நீரே ஆதாரம் ஐயா (நம்பின)
வெம்பியவனலைந்ததும் போதும்
இதைவிட வெட்கமுண்டோ
துக்கமுண்டோ நிர்க்கதிக் காளாக்கிடாது (நம்பின)
பாதகத்தாயாதிமுஞ்சன் படுத்திய கொடுமையை
பாரில் நினைப்பதுவும் பரிதாபமே
காதகன் புவியனைத்தும் கட்டியாள நினைக்கின்ருன்
காரணமின்றி யடைந்தான் கடுங்கோபமே
பேதகமில்லாமுடிக்குப் பிறந்தமகனிருக்கப்
பித்தனிடம் விடுவது எத்தனையோ பெரும்பாபம்
சாதகமானவுதவி தாமேபுரிவீர் நீர்
பூதலமுழுதும்நல்ல புகழ்பெறுவீர் சொன்னேன் (நம்பின)

காளிதாஸன்

54 ராகம் : இந்துஸ்தான் காபி ஜம்பை.

ஆதித்தர் விடுந்தூதன் நானே நேராக (ஆதித்)
பாதித்த மாபோஜன் பதியரசைப் பெறவே (ஆதித்)
தாக்ஷண்யமு மக்காகத் தரணிமேல் பாராட்டித்
தீக்ஷண்ய மடையவே திகழ்நீதியே காட்டி
மாச்சரியமாயிந்த மண்ணுலகை யாளுகிறீர்
வீக்ஷண்யப் போராட்டம் விளைந்திடச் சம்மதமோ (ஆதித்)

முஞ்சன்

55 ராகம் : அடாணு ஆதிதாளம்

நிறுத்தடா. போதும். நிறுத்தடா
நீதிபோதும். நிறுத்தடா நீ

நினைத்தபடி மொழி
பிதற்றுவது பழி (நிறுத்தடா)

பொறுத்தனேவுனைத் தூதுவனென்றே
பூவினில் யாசகக் காவியம் படிப்பதை (நிறுத்தடா)

பட்டப்பகல் இறவாய் விதித்தாலும்
பாஸ்கரன் தென்வடபா லுதித்தாலும்
இட்டமுறேள்முடி தருகவேமேலும்
இன்றேசமர் புரிகின்றேனுறுதியாய் (நிறுத்தடா)

56 போஜன்

விருத்தம்.

முத்தனையும் சிந்துநதி வளநாட்டிற்
சிலகாலம் முடியைத் தாங்கி
எத்தனையோ பழிபுரிந்தீர் எனைக்கொல்ல
மனந்துணிந்தீர் இருந்திட்டாலும்
அத்தனையும் நான்மறந்தேன் சிற்றப்பா
இனியேனும் அறஞ்சேராமல்
பித்தனைப்போல் தற்கொலை புரிந்திறந்தே
எங்களையும் பிரிந்தீரந்தோ.

ஜெயபாலன்.

57 ராகம்: ஆனந்தபைரவி ஆதிதாளம்.

துயரம் விலகிடத்தானே—இளந்
தோகைசரிதம் உறைப்பேனே கறுங்
கயல்விழிக்கனியை முன்நானே கொடுங்
காட்டிலெடுத்தருள் பாராட்டியே வளர்த்தேனே (துய)

ஜெயமிகும் ஆதித்தபதியே வனம்
சேர்ந்து வேட்டையாடிய ததியே எதிர்
பயமுறுத்தியப்புலிச் சதியே கண்டு
பாவையை விடுத்தனர் பூவிலதோகதியே (ஜெயமிடும்)

சின்னஞ் சிறுமிதன்னை யெடுத்தேன் மதி
சிறக்கப் பலகலையும் கொடுத்தேன் பசும்
பொன்னெனப் பொலிவுற விடுத்தேன் மகா
போஜருக்குதவவே நேசமுட விடுத்தேன் (சின்ன)

என்னறுங்கடமையை தீர்த்தேன் இவள்
இனியபிதாவிடம் சேர்த்தேன் இந்த
நன்னயச்சமயமும் பார்த்தேன் குண
நாயகிசுகம்பெறத் தாய்தந்தை யெனக்காத்தேன்

தனிக் குறவன்

வாங்க—மச்சா வாங்க
ஏமச்சா—வாங்க மச்சா மச்சா (வாங்க)

ஒங்க வங்கணத்துலே மயங்கிப்போன
என் தங்கச்சியெல்லாஞ் சவுக்கியந்தானு (வாங்க)

சுடுவெயிலுக்குங் குடுவெ கள்ளுக்குஞ்
சோக்குத்தான் மச்சான் ஊறுதே
நாக்குத்தான் மச்சான் வெடக்குது
மூக்குத்தான் மச்சான் கிளே (சுடு)

சும்மா பொங்கி போவுதே நம்ம
துட்டும் நய்ட்டமாவுதே வாயெத்
தொடச்சிப்புட்டுக் குடிச்சுக்கிட்டுச்
சொல்லுறேன். ஒருசேதி.

கோரஸ்

மகாதர்ம மகா ராஜனே
சுகபோஜனே சதா வாழ்க (மகா)

ஜேகமேபுகழ் ஜேய விவேக
சிந்துலவிஜய சிம்ஹமேதியாக
தீரவீர வாழ்க வாழ்க (மகா)

சுபம்! சுபம்!! சுபம்!!!

Printed at the British Press, 42, Anderson Street, Madras.

Films for 100 per cent Entertainment.

READY FOR IMMEDIATE BOOKING

1.	Rupalekha	... *New Theatres Ltd. Calcutta.*
2.	Daku Mansoor	,, ,,
3.	Devdas	,, ,,
4.	Dhup Chaon	,, ,,
5.	Karwane Hayat	*New Theatres. New India.* ,,
6.	Blood Feud	*New India Films Ltd.* ,,
7.	Karwane Husn	*Kanwal Movietone Ltd. Bombay.*
8.	Rangin Gunah	,, ,,
9.	Kalkoot	*Sudha Pictures, Ltd.* ,,
10.	Ahalyodhar	*Pratima Phototone.* ,,
11.	Khoonka Khoon (Hamlet)	*Stage Film Co.* ,,

COMING ATTRACTIONS:

1.	Krore Pati (Millionaire)	*New Theatres, Ltd. Calcutta.*
2.	Satan	,,
3.	Griha Daha	,, ,,
4.	Dena Paona	,, ,,

and also a select stock of British and American and German class Productions and Jungle Thrillers.

Sole Distributors: –

CALCUTTA FILM EXCHANGE

50, Armenian Street, G.T., Madras.

போஜராஜா என்ற படத்தின் ஓர் காக்ஷி.